நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளுக்கு உதவும் திட்டங்கள் விளக்கம்**

First Published : 08 Aug 2010 01:34:29 PM IST

உத்தரமேரூர், ஆக. 7: உத்தரமேரூர் வட்டார அனைத்து விவசாய சாகுபடி பயிர்கள் உற்பத்தி விவசாயிகள் சங்க பொதுக்குழுக் கூட்டம் அன்மையில் உத்தரமேரூரில் நடந்தது. இதில் உத்தரமேரூர் வட்டத்தைச் சேர்ந்த அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு உதவக்கூடிய திட்டங்கள் பற்றி பேசினர்.

÷வட்டாரத் தலைவர் பி.கே.புருஷோத்தமன் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்புச் செயலர் சி.எல்.ராஜவேலு முன்னிலை வகித்தார். வட்டாரச் செயலர் பா.பாஸ்கர் வரவேற்றார். விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் மு.சடகோபன், துணைத் தலைவர் ஏ.ஏகாம்பரம், வட்டார பொருளாளர் கோ.நந்தகோபால் துணைச் செயலர் கெஜபதி உட்பட பலர் பேசினார்கள்.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 08 Aug 2010 12:09:28 PM IST

பெரம்பலூர், ஆக. 7: பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

பயிற்சி முகாமை தொடக்கிவைத்த வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து, விதை நேர்த்தி செய்தல், உர மேலாண்மை, நூண்ணூட்ட மேலாண்மை, பயிர் பாதுகாப்பு குறித்து விளக்கம் அளித்தார்.

தொழில்நுட்ப நிபுணர்கள் சி. சங்கர், ஜெ. கதிரவன், இரா. பிரிஸ்கா பிளேவியை ஆகியோர் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

இதில் திருவள்ளுவர் உழவர் மன்றத் தலைவர் கு. வரதராசன், முன்னோடி விவசாயிகள் மு. கருணாமூர்த்தி, வெங்கடாசலம், ரவிக்குமார் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். நிறைவில், தொழில்நுட்ப நிபுணர் கிருஷ்ணன் நன்றி கூறினார்

**உர விற்பனை நிலையங்கள் குறித்து புகார் அளிக்கலாம்**

First Published : 08 Aug 2010 12:08:31 PM IST

பெரம்பலூர், ஆக. 7: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் விதிமுறைகளை மீறும் உர நிலையங்கள் மீது புகார் அளிக்கலாம் என்று பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் செ. சிவக்குமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் தனியர், வேளாண் கூட்டுறவு வங்கிகளில், விவசாயிகளுக்கு அரசு அனுமதிக்கப்பட்டுள்ள மானிய விலையில் உரம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக, தனியார் விற்பனை செய்யும் உரங்களை கண்காணிக்கும் வகையில், பெரம்பலூர் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் கண்காணிப்புப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காணிப்புப் பிரிவு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை ஆக. 2 ஆம் தேதி முதல் செப். 30 ஆம் தேதி வரை செயல்படும்.

எனவே, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் உர விற்பனைத் தொடர்பான புகார்களை 04328- 225773, 9047072763, 9047072762 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

மேலும், தனியார் உர வியாபாரிகள், விற்பனை செய்யும் உரங்களுக்கு கட்டாயம் ரசீது அளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட உர விற்பனை நிலையங்கள் மீது உரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் டிஏபி உரம் விற்கத் தடை: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்களில் டிஏபி உரம் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தமிழக அரசின் உத்தரவின்படி டை அம்மோனியம் பாஸ்பேட் என்ற டிஏபி உரம் தனியார் உர விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் சாகுபடி செய்யவுள்ள மானாவாரி பயிர்களுக்குத் தேவையான டிஏபி உரங்களை அந்தந்தப் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம். விவசாயிகள் அனைவரும் ஒரே நேரத்தில் சென்று வாங்குவதைவிட முன்கூட்டியே உரத்தைப் பெற்று பயனடையலாம்.

மேலும், இந்த மாதத் தேவைக்காக பெரம்பலூர் மாவட்டத்துக்கு டிஏபி 1900 மெ.டன்னும், கூட்டு உரம் 1660 மெ.டன்னும், மூரியேட் ஆப் பொட்டாஷ் 615 மெ.டன்னும், யூரியா 545 மெ.டன்னும்,

அரியலூர் மாவட்டத்துக்கு டிஏபி 1200 மெ.டன்னும், கூட்டு உரம் 910 மெ.டன்னும், மூரியேட் ஆப் பொட்டாஷ் 450 மெ.டன், யூரியா 400 மெ.டன் என பெரம்பலூர், அரியலூர் மாவட்ட விவசாயிகளின் தேவைக்காக 7680 மெ.டன் ரசாயன உரம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

எனவே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான ரசாயன உரங்களை தனியார், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம், மூட்டையின் மேல் குறிப்பிட்டுள்ள விலையை அறிந்து, ரசீது கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். உரம் பெறுவதில் ஏதாவது பிரச்னை இருந்தால், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக தொலைபேசியான 04328- 225773 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**பருத்தி, எள்ளுக்கு கூடுதல் விலை**

First Published : 08 Aug 2010 10:53:20 AM IST

எடப்பாடி, ஆக. 7: கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சனிக்கிழமை நடந்த ஏலத்தில் பருத்தி, எள்ளுக்கு கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
÷மேலும், 8 ஆயிரம் பருத்தி மூட்டைகள், 800 எள் மூட்டைகள் ரூ. 1.30 கோடி ஏலம் போனது.
÷திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெறும். பருத்தி வரத்து அதிகம் உள்ள நேரங்களில் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் ஏலம் நடைபெறும்.
÷இந்த பருத்தி ஏலத்தில் கலந்துகொள்வதற்கு உள்ளூர் வியாபாரிகள், சேலம், நாமக்கல், தர்மபுரி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள், ஆந்திரா, ஒரிசா போன்ற மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகளும் அதிக அளவில் ஏலத்தில் கலந்துகொள்வர்.
÷ இதனால் கொங்கணாபுரம் கூட்டுறவு சங்கத்தில் நடைபெறும் ஏலத்தில் மற்ற இடங்களை காட்டிலும் பருத்திக்கு கூடுதல் விலை கிடைத்து வந்தது.

கொங்கணாபுரத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 8 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்தது. பி.டி ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ. 3 ஆயிரத்து 400 முதல் ரூ.3 ஆயிரத்து 800 வரையும், சுரபி ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ. 3 ஆயிரத்து 800 முதல் ரூ. 4 ஆயிரத்து 500 வரையிலும், சம்ஹார் ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ. 3ஆயிரத்து 400 முதல் ரூ. 3 ஆயிரத்து 650 வரையிலும் ஏலம் போனது. சனிக்கிழமை மட்டும் ரூ. 1.05 கோடிக்கு பருத்தி விற்பனையானது.

÷ இக்கூட்டுறவு சங்கத்தில் பருத்திக்கு கூடுதல் விலை கிடைத்து வருவதால் பருத்தி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

÷இதேபோல் கொங்கணாபுரம எள் ஏலத்திற்கு 800 மூட்டைகள் வந்தன. இதில் வெள்ளை எள் ஒரு கிலோ ரூ. 44 முதல் ரூ. 63 வரையும், கருப்பு எள் ரூ. 32 முதல் 45 வரை ஏலம் போனது. அதிகபட்சமாக 25 லட்சம் ரூபாய்க்கு எள் ஏலம் போனது.

**ஆடிப்பட்டம் தோட்டக்கலை விழிப்புணர்வு கூட்டம்**

First Published : 08 Aug 2010 01:24:51 PM IST

கும்மிடிப்பூண்டி, ஆக. 7: ஆடிப்பட்டம் மற்றும் ஆத்மா திட்ட விழிப்புணர்வு கூட்டம் கும்மிடிப்பூண்டியை அடுத்த மாதர்பாக்கத்தில் நடைபெற்றது.

÷கும்மிடிப்பூண்டி தோட்டக்கலைத் துறையின் சார்பாக நடந்த இந்த கூட்டத்தை மாதர்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் சகுந்தலா கஜேந்திரன் துவக்கி வைத்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் தி.கார்த்திகேயன் பேசும் போது ஆடிப்பட்டத்திற்கு தேவையான காய்கறி விதைகளான கத்தரி, வெண்டை, முருங்கை, தண்டுகீரை ஆகியவற்றின் விதைகள் 50 சதவீத மான்ய விலையில் வழஙகப்படுவதாகவும், சிக்கனமான பாசனத்திற்கு சொட்டு நீர் பாசன முறையை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும் என்றும்  துல்லிய பண்ணைய திட்டத்தில் விவசாயிகளுக்கு 65 சதவீத மானியம் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

÷கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்ட திருவள்ளூர் மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குனர் அலுவலக உதவி இயக்குனர் டி.ஸ்டான்லி தோட்டக்கலை துறையின் நெருக்கி நடவு திட்டம், ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் போன்றவற்றை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

÷பின்னர் இந்த கூட்டத்தில் மான்ய விலையில் காய்கறி விதைகள், துல்லிய பண்ணைய விவசாயிகளுக்கு நீர் வழி இராசயன உரங்கள் வழங்கப்பட்டது. வேளாண் உதவி அலுவலர் கோதண்டம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**திண்டிவனத்தில் சிப்காட் அமைப்பதற்கு விவசாயிகள் முன்னேற்ற சங்கம் எதிர்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,04:27 IST

திண்டிவனம் : திண்டிவனம் அருகே சிப்காட் அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்த இந்திய விவசாயிகள் முன்னேற்ற சங்கம் முடிவு செய்துள்ளது.இந்திய விவசாயிகள் முன்னேற்ற சங்க செயற்குழு கூட்டம் திண்டிவனத்தில் நடந்தது. நிறுவனர் வசந்தி தலைமை தாங்கினார். தலைவர் முருகேசன் முன்னிலை வகித்தார். பொரு ளாளர் ஏழுமலை வரவேற்றார். துணைத் தலைவர் வைத்தியலிங்கம், கொள்கை பரப்பு செயலாளர் ஜானகிராமன், நகர செயலாளர் ராஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண் டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:திண்டிவனம் அருகே அமைய உள்ள சிப்காட்டிற்காக கொள்ளார், வெண்மணியாத்தூர், பெலாகுப் பம், வேம்பூண்டி, சாலை ஆகிய கிராமங்களிலிருந்து விவசாய நிலங்கள் 720 ஏக்கர் அரசு எடுக்க உள்ளது. ஏழை, எளிய விவசாயிகளின் நிலங்களைக் கையகப்படுத்த முயற்சிப்பதற்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. சிப்காட் அமைய எதிர்ப்பு தெரிவித்து தெருமுனை கூட்டம் நடத்துவது, வரும் 16ம் தேதி திண்டிவனம் தாலுகா அலுவலகம் முன்பும், 20ம் தேதி விழுப்புரம் கலெக்டர் அலுவலகம் முன்பும் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.தேசிய வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனுக்காக, டிராக்டர் களை ஜப்தி செய்து பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன.

**நெல் விதை கிடைக்காமல் விவசாயிகள் அவதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,01:13 IST

வாலாஜாபாத் : வாலாஜாபாத் வேளாண்மை விரிவாக்க மையத்தில் குண்டு ரக நெல் விதைகள் இருப்பு இல்லாததால் விவசாயிகள் விதைகளுக்காக அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.வாலாஜாபாத் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு வாலாஜாபாத் வேளாண்மை மையம் மற்றும் பரந்தூர் துணை வேளாண்மை விற்பனை கிடங்குகள் ஆகியவற்றிலிருந்து தாங்கி,ஊத்துக்காடு, வில்லிவலம், சிறுவாக்கம், சிறுவள்ளுர், காட்டுபட்டுர்,

நாகப்பட்டு, கொட்டவாக்கம், புள்ளலூர், தண்டலம், நெல்வாய் உட்பட 50 க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் உரம் மற்றும் விதைகளை வாங்கி பயனடைந்து வருகின்றனர்.

தற்போது ஆடிப்பட்டத்தில் அனைத்து விவசாயிகளும் நெல் பயிரிடுவதற்காக புழுதி ஓட்டி நிலத்தை பதப்படுத்தி வைத்துள்ளனர். ஆனால் வாலாஜாபாத் விரிவாக்க மையத்திலும், பரந்தூர் வேளாண்மை விற்பனை கிடங்கிலும் ஏ.டி.டி.45 விதைகளைத் தவிர வேறு எந்த விதைகளும் இல்லை.விரிவாக்க மையத்திலும் குண்டு ரகம் இல்லை. மணிலா விதைகள் போதிய இருப்பு இருந்தும் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படாமல் இருப்பது விவசாயிகளிடையே கடும் அதிருப்தியை எற்படுத்தியுள்ளது. வேளாண் கிடங்குகளில் விதைகள் இருப்பு இல்லாததால் விவசாயிகள் தனியார் விதை மையங்களுக்கு சென்று விதைகள் வாங்க வேண்டியுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான விதைகளை வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வழங்க வேளாண் துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**குறைகேட்புக் கூட்டத்தை அதிகாரிகள்புறக்கணிப்பதாக விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,02:54 IST

சிறுபாக்கம்:மங்களூர் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் பல்வேறு துறை அதிகாரிகள் தொடர்ந்து புறக்கணிப்பதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.மங்களூர் ஒன்றிய விவசாயிகளின் குறைகேட்புக் கூட்டம், ஒன்றிய வளாகத் தில் நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் பன்னீர் செல் வம் தலைமை தாங்கினார். மார்கெட்டிங் பிரிவு அலுவலர் சிவக்குமார், தோட்டக்கலை அலுவலர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடப்பு ஆண்டிற்கு மானாவாரி நிலங்களுக்கு தேவையான மக்காச்சோள விதைகள், வேளாண் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய் கிணறு, மானிய விலையில் தோட்டக்கலை பயிர்களுக்கு உரங்கள், பயிர்களை நாசம் செய்யும் வன விலங்குகளை கட்டுப் படுத்த வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி பேசினர்.இதற்கு பதில் அளித்து உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் பேசுகையில், "இது குறித்து சம்பந்தப் பட்ட துறை அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்யப் படும்' என்றார்.

தொடர்ந்து விவசாயிகள், கடந்த ஆண்டு நவம் பர் முதல் நடைபெறும் குறைகேட்புக் கூட்டத் திற்கு மின்துறை, ஊரக வளர்ச்சி, பொதுப்பணித் துறை, வருவாய் மற்றும் வனத்துறை உள்ளிட்ட துறை அதிகாரிகள் வருவதில்லை. தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர்.இதனால் குறைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நேரில் தெரிவிக்க முடிவதில்லை என அனைத்து விவசாயிகளும் புகார் தெரிவித்தனர்.

**விதைத்த இடத்திலே மீண்டும் பருத்தி சாகுபடி செய்தால் மகசூல் கிடைக்காது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,03:28 IST

தர்மபுரி: "தொடர்ச்சியாக சாகுபடியில் விதைத்த இடத்திலே மீண்டும் பி.டி., ரக பருத்தி விதைகளை சாகுபடி செய்தால் மகசூல் கிடைக்காது' என, விவசாயிகளுக்கு வேளாண்மை துறை எச்சரித்துள்ளது.

இது குறித்து தர்மபுரி கலெக்டர் (பொறுப்பு) மகேஸ்வரி வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் பருத்தி சாகுபடியில் ஆண்டுதோறும் விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர். தற்போது பருத்தி சாகுபடிக்காக பெரும்பான்மையாக பி.ட்டி., பருத்தி ரக விதைகள் விற்பனை செய்யப்படுகிறது. இந்த ரக விதைகளை மானாவாரியாக பயிர் செய்யாமல் நீர்பாசனம் உள்ள நல்ல வடிகால் விவசாய நிலங்களில் மட்டுமே சாகுபடி செய்ய வேண்டும்.மிக முக்கியமான வளர்ச்சி பருவங்களான பூ மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் மண்ணில் போதுமான அளவு ஈரம் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். நீண்ட இலை கொண்ட பி.ட்டி., பருத்தியில் தத்து பூச்சி மற்றும் அசுவணி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளை இளம்பருவத்தில் கட்டுப்படுத்த விவசாயிகள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்

தொடர்ச்சியாக பருத்தி பயிர் சாகுபடி செய்யும் இடங்களில் மீண்டும் பி.டி., பருத்தியை சாகுபடி செய்ய கூடாது. சாகுபடி செய்யும் பி.டி., பருத்தி வகைகளை சுற்றி 20 சதவீதமும் ஐந்து வரிசைகள் பி.டி., பருத்தி அல்லாத மற்ற ரக விதைகளை விதைக்க வேண்டும். முக்கியமாக விவசாயிகள் விதைகள் வாங்கும்போது, விதை விற்பனையாளர்களிடம் இருந்து விற்பனை ரசீது கட்டாயம் பெற வேண்டும். அந்த விற்பனை ரசீதில் விவசாயி பெயர், முகவரி, விதையின் பெயர், ரகம், குவியல் எண், முளைப்பு திறன், காலாவதி நாள் மற்றும் விதை விற்பனை உரிம எண் ஆகியவை குறிப்பிட்ட விற்பனையாளர் கையோப்பமிட்டு வாங்க வேண்டும்.

பி.டி., பருத்தி விதை கொள்கலன்களில் எந்த மாநிலத்திற்கு, எந்த பருவத்தில் பயிரிடலாம் என குறிப்பிடப்பட்டிருக்கும். அதை பார்த்து விசாரித்த பின்னரே விவசாயிகள் பருத்தி விதைகளை வாங்க வேண்டும். விதை விற்பனை சம்பந்தமாக மேலும் விவரங்கள தெரிந்து கொள்ள விவசாயிகள் விதை ஆய்வு துணை இயக்குனர், விதை பரிசோதனை நிலையம், மாவட்ட ஆட்சியர் வளாகம், தர்மபுரி என்ற முகவரில் தெடார்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.வேளாண்மை துறை அறிவுறுத்தும் தொழில்நுட்பத்தை பின்பற்றி விவசாயிகள் பருத்தியை சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம்.
இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஈரோட்டில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,02:50 IST

ஈரோடு: ஈரோட்டில் நேற்றிரவு பெய்த திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டில் போதிய பருவமழை பெய்யவில்லை. கேரளாவில் பெய்த பருவமழையால் பவானிசாகர் அணை சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் முழு கொள்ளளவை எட்டியது. அதன் பின்பு அணைக்கு அதிகளவு தண்ணீர் வரத்து இல்லை. கேரள மாநிலத்தில் தற்போது பருவ மழை பெய்தபோதும் அணைக்கு சென்ற 31ம் தேதி அதிக பட்சமாக 6,422 கன அடி  தண்ணீர் வந்தது. குறைந்தளவே அணைக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து ஆற்றில் தினமும் 1,200 கன அடியும், வாய்க்காலில் 5 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் நீர்மட்டம் 77.65 அடியாக உள்ளது.

மாவட்டம் முழுவதும், சென்ற  மாதம் தொடர்ந்து மூன்று நாட்கள் பலத்த மழை பெய்தது. அதன் பின்னர் மழை பெய்யவில்லை. இதனால் மாவட்டம் முழுவதும் அக்னி நட்சத்திரத்துக்கு பின்னரும் வெயிலின் தாக்கம் குறையவில்லை. நேற்று காலை வழக்கத்தைவிட, வெயிலின் தாக்கத்துடன் புழுக்கம் அதிகமாக இருந்தது. நேற்று மாலை 5.30 மணிக்கு திடீரென லேசான தூரலுடன் குளிர்ந்த காற்று வீசியது.அரைமணி நேரம் வரை தூரல் மழை பெய்ததால், மாலை முதல் இரவு வரை குளுமையாக இருந்தது. மூலப்பாளையம், பூந்துறை, மொடக்குறிச்சி பகுதியில் நேற்று இரவு மழை பெய்தது. மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**மரவள்ளியில் மாவுப்பூச்சி கட்டுப்படுத்த புதிய முறை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,02:31 IST

மோகனூர்: மோகனூர் யூனியன் ஆரியூர் பஞ்சாயத்தில்  தோட்டக்கலைத்துறை மற்றும் திருவனந்தபுரம் மத்திய கிழங்கு ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது தொடர்பான செயல்விளக்க கருத்தரங்கு நடந்தது.

மத்திய கிழங்கு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி அனந்தராமன் தலைமை வகித்து பேசியதாவது:மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 7 மி.லி., சோப் எண்ணெய், 3 மி.லி., வேப்ப எண்ணெய் கலந்து பயிரின் அடிபக்க இலைகள், தண்டு மற்றும் மண்ணில்படும்படி வேகமாக தெளிக்க வேண்டும்.அப்போது, மாவுப்பூச்சியின் மேல் பரப்பில் உள்ள மெழுகு போன்ற

பொருள் கழுவப்பட்டு பூச்சிகள் அழிக்கப்படும். ஒரு வாரம் கழித்து ஒரு லிட்டர் தண்ணீரில் 7 மி.லி., வேப்ப எண்ணெய், 3 மி.லி.,சோப்பு எண்ணெய் என்ற அளவில் கலந்து இலையின் அடிப்பாகம், தண்டு முழுவதும் நனையும்படி தெளித்தால் மாவுப்பூச்சி முழுவதும் கட்டுப்படுத்தப்படும். இந்த முறைகளை விவசாயிகள் ஒருங்கிணைந்து கையாண்டு மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

விஞ்ஞானி ஜெயபிரகாஷ், தோட்டக்கலை துணை இயக்குனர் கதிரவன், உதவி இயக்குனர்கள் ராஜேந்திரன், அசோகன், வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ, ஆரியூர் பஞ்சாயத்து முன்னாள் தலைவர் ராஜாகண்ணன், உதவி அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.மரவள்ளியில் மாவுப்பூச்சி கட்டுபாடு தொடர்பான புதிய தொழில் நுட்பத்தில் விவசாயிகளுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், தோட்டக்கலைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பார்த்தீனிய செடி பரவாமல் தடுக்க பங்களிப்பு : வேளாண் பல்கலை துணைவேந்தர்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,02:43 IST

கோவை: ""குடியிருப்பு பகுதியில் பார்த்தீனிய செடி பரவாமல் தடுக்க, பொதுமக்களின் பங்களிப்பு அவசியம்,'' என, வேளாண் துணைவேந்தர்முருகேச பூபதி பேசினார்.வேளாண் பல்கலையில் பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரவிழா, ஆக 7ம் தேதி முதல் 13ம் தேதி வரை நடக்கிறது. ஊர்வலங்கள், வானொலி வழிச் செய்திகள் மற்றும் பிரசுரங்கள் வினியோகம் உள்ளிட்டவை மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. துவக்க விழாவில் நடந்த விழிப்புணர்வு பேரணியை வேளாண் பல்கலை டீன் ஜெயபால் துவக்கி வைத்தார். துணைவேந்தர் முருகேச பூபதி தலைமை வகித்து பேசியதாவது:தமிழ்நாடு வேளாண் பல்கலையின் உழவியல் துறையிலுள்ள களை மேலாண்மை பிரிவு ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்களிடையே பார்த்தீனியத்தின் தீமைகØள் மற்றும் அதனை அழிக்கும் முறைகள் உள்ளிட்டவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

பார்த்தீனியம் உயிரினக் கோட்பாட்டுக்கே ஒரு சவாலான நச்சுத் தன்மை வாய்ந்த தாவரம். அமெரிக்காவை தாயகமாக கொண்ட பார்த்தீனியம், 1956ம் ஆண்டு கோதுமை இறக்குமதியின் போது இந்தியாவில் ஊடுருவியது. இக்களையின் பரவல் முதலில் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் இருந்தது. தற்போது, இந்தியாவின் ஒரு சில மாநிலங்களைத் தவிர அனைத்து மாநிலங்களிலும் உள்ளது.

ஒவ்வொரு செடியும் ஏறக்குறைய 25 ஆயிரம் விதைகளை உற்பத்தி செய்யும். கோடை குளிர் கால பருவங்களில் முளைக்கும் திறன் உடையவை. 30 நாட்களில் முளைத்து, பூ பூத்து ஒரு ஆண்டில் நான்கு தலை முறைகள் வளரும். பார்த்தீனியத்திலுள்ள "பார்த்தீனியன் மற்றும் அம்புரோசின்' நச்சுப்பொருட்களால் தோல் மற்றும் கண் அரிப்பு, வெடிப்பு, கொப்பளங்கள், எக்சிமா உள்ளிட்ட தோல் வியாதிகள் உண்டாக்குகிறது.கால்நடைகள் பார்த்தீனியத்தை உண்பதால், மடி எரிச்சல், காய்ச்சல் மற்றும் புண்கள் ஏற்படுகின்றன. வாய் மற்றும் ஜீரண உறுப்புகளில் புண்கள் ஏற்படுகின்றன. பார்த்தீனியம் செடி உள்ள இடங்களில் கால்நடைகள் மேய்வதால், கால்நடைகளில் இருந்து பெறப்படும் பாலில் நச்சுத்தன்மை மனிதனுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த தொழில்நுட்பங்களாக, பார்த்தீனியத்தை பூப்பதற்கு முன் கையுறை கொண்டு அல்லது கருவியை பயன்படுத்தி செடிகளை வேருடன் அகற்றி எரித்தல், களைக்கொல்லிகள் தெளித்து கட்டுப்படுத்துதல், தரிசு நிலங்களில் ஆடர் ஆவாரை, நாய்வேளை மற்றும் துத்தி வகைச் செடிகளை போட்டிச் செடிகளாக வளர்த்தல் மற்றும் ஸைக்கோகிரம்மா பைக்காலரேட்டா என்ற மெக்ஸிகன் வண்டை பரவச்செய்தல் மூலம் பார்த்தீனித்தை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தலாம். பார்த்தீனியம் குடியிருப்பு பகுதிகளிலும் பரவிவிட்டதால் அதனை கட்டுப்படுத்த பொதுமக்களின் பங்களிப்பு அவசியம்.இவ்வாறு, துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார்.பேராசிரியர்கள் சின்னுசாமி, முத்துகிருஷ்ணன், கோவிந்தராஜன், பயிர் மேலாண்மை இயக்குனர் ஜெயராமன், முதல்வர் ஜெயபால் மற்றும் என்.எஸ்.எஸ்., மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் 350பேர் பங்கேற்றனர்.

**மாடுகளை இழந்த விவசாயிக்கு நஷ்டஈடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,01:59 IST

சாத்தான்குளம் : சாத்தான்குளத்தில் இடிதாக்கியதில் பசுமாடுகளை இழந்த விவசாயிக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டது.
சாத்தான்குளம் தாலுகா பெருமாள்குளத்தில் கடந்த ஜூன் மாதம் இடிதாக்கியதில் தங்கையா என்பவரது இரண்டு பசு மாடுகள் பலியாயின. இவற்றிற்கு இயற்கை பேரிடர் இழப்பீடாக 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை சாத்தான்குளம் தாசில்தார் ஹாரிஸ் வழங்கினார். நிகழ்ச்சியில் தலைமையிடத்து துணை தாசில்தார் ஜெயராணி, உதவியாளர் பேச்சிமுத்து, வி.ஏ.ஓ.,மணிகண்டன், பொன்இசக்கி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வேளாண் இயந்திரங்கள் மூலம் ரூ.58.67 லட்சம் வருவாய்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,04:00 IST

திருப்பூர் : திருப்பூர் மாவட்டத்தில், வேளாண் இயந்திரங் களை வாடகைக்கு விட்டதன் மூலமாக, 58.67 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. **கலெக்டர் சமயமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை:** வேளாண்மை பொறியியல் துறை சார்பில், 2009-10ம் ஆண்டில், மண் தள்ளும் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கியதில், 33.40 லட்சம் ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது. அதேபோல், 2010-11ம் ஆண்டில் இதுவரை 12.90 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.திருப்பூர் மாவட்டத்தில் ஐந்து மண் தள்ளும் இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளன. எரிபொருளுடன் ஒரு மணி நேரத்திற்கு 720 ரூபாய் வீதமும், எரிபொருள் இல்லாமல் மணிக்கு 350 ரூபாய்(எரி பொருள் விவசாயிகளை சார்ந்தது) வீதமும் வாடகைக்கு விடப்படுகின்றன.

உழுவை இயந்திரம்: மாவட்டத்தில் இரண்டு இயந்திரங்கள் உள்ளன. அவற்றின் மூலமாக, 2009-10ம் ஆண்டில், 5.30 லட்சம் ரூபாயும், நடப்பு ஆண்டில், கடந்தமாதம் வரையில், 1.81 லட்சம் ரூபாயும் வாடகை வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.உழவு மற்றும் போக்குவரத்து பணிகளுக்கான டிராக்டர்கள், எரிபொருளுடன் மணிக்கு 285 ரூபாய் வீதமும், எரிபொருள் இல்லாமல், 120 ரூபாய் வீதமும் வாடகைக்கு விடப்படுகின்றன. அறுவடை இயந்திரம்: நெல் அறுவடை இயந்திரம் கடந்த ஆண்டில், 601 மணி நேரம் பணியாற்றி, 4.71 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

நடப்பு ஆண்டில், கடந்த மாதம் வரையில் 55 ஆயிரம் ரூபாய் ஈட்டியுள்ளது. நெல் அறுவடை இயந்திரங்கள், எரிபொருளுடன் மணிக்கு 805 ரூபாய்க்கும், எரிபொருள் இல்லாமல், மணிக்கு 600 ரூபாய் வீதமும் வாடகைக்கு விடப்படுகின்றன. **மோட்டார் மானியம்:** அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மின்மோட்டார் களின் விலையில், 50 சதவீதம் அல்லது 10 ஆயிரம், இவற்றில் குறைவான தொகை மானியமாக வழங்கப்படும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு புதிய மோட்டார் விலையில், 50 சதவீதம் அல்லது 12 ஆயிரம் ரூபாய், இதில் குறைவான தொகை மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தில், நடப்பு ஆண்டில், 1,210 விவசாயிகளுக்கு, 1.21 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்க இலக்கு நிர்ணயம் செய்து அரசிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.
இவ்வாறு, கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளின் இழப்பை சரிக்கட்ட மானியத்துடன் வேளாண் காப்பீடு திட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2010,04:09 IST

திருப்பூர் : விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புகளை சரிக்கட்டுவதற்காக, தேசிய வேளாண் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வரையறுக்கப்பட்ட பயிர்செய்யும் விவசாயிகள், 50 சதவீத மானியத்துடன் பிரீமியம் செலுத்தி பயனடையலாம் என, மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.கலெக்டர் சமயமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை:நடப்பு நிதியாண்டில் (2010-11), 15 ஆயிரத்து 500 எக்டரில் நெல்; 67 ஆயிரத்து 100 எக்டரில் சிறுதானியங்கள்; 22 ஆயிரத்து 102 எக்டர் பயறு வகைகள்; 8,000 எக்டர் கரும்பு; 33 ஆயிரத்து 42 எக்டர் எண்ணெய் வித்துக்கள்; 1,000 எக்டர் பருத்தி என, 149.74 எக்டர் பயிர்சாகுபடி செய்ய வேளாண்துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.நெற்பயிருக்கான 15 ஆயிரத்து 500 எக்டரில், செம்மை நெல் சாகுபடி திட்டத்தில், 6,300 எக்டர் பரப்பளவிற்கு பயிரிடவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

விவசாயிகளின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில், தரமான சான்று விதைகள் வழங்கப்படுகின்றன. இதில், 97 மெட்ரிக் டன் நெல்; 20 டன் சிறுதானியங்கள்; 94 டன் பயறு வகைகள்; 167 டன் எண்ணெய் வித்துக்கள் வினியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தியில் ஏற்படும் இழப்புகளை சரிகட்டுவதற்காக, தேசிய வேளாண் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, சோளம், நிலக்கடலை, நெல், மக்காசோளம் பயிர்களுக்கு இத்திட்டத்தில் பதிவு செய்து, பிரீமிய தொகையில் 50 சதவீத மானியம் பெறலாம்.தேசிய உணவு உற்பத்தியை பெருக்கும் வகையில், 29.44 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலமாக, ஆதார விதை மற்றும் சான்றுவிதை கொள்முதல் மற்றும் வினியோகத்திற்கும், ஒருங்கிணைந்த நுண் ணூட்டச்சத்து மேம்பாடு, "ஜிப்சம்', தெளிப்பு நீர் பாசனம், விதைகள் சேகரிப்பதற்கு கொள்கலன்கள் மற்றும் "பவர்டிரில்லர்'கள் மானியத்தில் வழங்கப்படுகின்றன. விதைகிராம திட்டம்: தரமான சான்றுபெற்ற விதைகளை கொள் முதல் செய்வதற்கும், வினியோகம் செய்வதற்கும், மானியம் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தில், விதைகளை நல்ல முறையில் சேமித்து வைப்பதற்கு கொள்கலன்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது; மொத்தம் 52.40 லட்சம் ரூபாய் அளவிலான மானியம் வழங்கப்பட உள்ளது.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம்:** இத்திட்டத்தின் வாயிலாக, விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் கிடைக்க வழிவகுக்கிறது. இதற்காக, 83.86 லட்சம் ரூபாயில் செயல்படுத்தப்படுகிறது. துல்லிய பண்ணைகள் அமைத்தல், செம்மை நெல் சாகுபடி, சான்று

விதை கொள் முதல் மற்றும் வினியோகம், "ஜிப்சம்' வினியோகம், "ஜிங்க் சல்பேட்' வினியோகம், பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி., தெளித்தல் போன்றவைகளை வினியோகம் செய்யும் பணி மேற்கொள்ளப் படுகிறது.மத்திய அரசின் சார்பு திட்டங் களான, ஐசோபாம் (மக்காசோளம்) 4.22 லட்சம் ரூபாய்; ஐசோபாம் (எண்ணெய் வித்துக்கள்) 24.78 லட்சம்; சிறுதானிய அபிவிருத்தி திட்டம் 12.87 லட்சம் ரூபாய் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

இத்திட்டத்தில், அனைத்து வகையான இடுபொருட் களும், 25 சதவீதம் முதல் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இத்திட்டங் களில் விவசாயிகள் பங்கேற்று பயனடையலாம். இவ்வாறு, கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## ***குன்னூர் நகராட்சி பகுதி மக்களுக்காக ஆப்பிள்பீ குடிநீர் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் அமைச்சர் ராமச்சந்திரன் உறுதி***

*குன்னூர், ஆக.9–*

*குன்னூர் நகராட்சி பகுதி மக்களுக்காக ஆப்பிள்பீ குடிநீர் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்று தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கூறி னார்.*

*செம்மொழி நகர்*

*குன்னூர் நகராட்சியின் 7–வது வார்டுக்குட்பட்ட ஆசிர் காம்பவுண்ட்டில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம் பாட்டு திட்டத்தின் கீழ் காங்கிரீட் சாலை அமைக்கப் பட்டுள்ளது. மேலும் இந்த பகுதிக்கு செம்மொழி நகர் என்றும் பெயர் சூட்டப் பட்டுள்ளது.*

*காங்கிரீட் சாலை மற்றும் செம்மொழி நகர் பெயர் பலகை திறப்பு விழா நேற்று நடைபெற்றது. விழாவுக்கு நகர்மன்ற கவுன்சிலரும், செம்மொழி நகர் தலைவ ருமான செல்வம் தலைமை தாங்கினார். தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, காங்கிரீட் சாலையையும், செம்மொழி*

நகர் பெயர் பலகையையும் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:–

சமத்துவ புரம்

தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி பகுத்தறிவு பகல வன், பெரியார் வழி நின்று அனைத்து மக்களும் சாதி, மத வேறுபாடுகள் இன்றி வாழ வேண்டும் என்று நோக்கத்தில் சமத்துவபுரத்தை ஏற்படுத்தி னார். இந்த செம்மொழி நகரில் அனைத்து தரப்பு மக்களும் கூடி வந்து உள்ளீர்கள். இதனை பார்க்கும் போது நமது மாவட் டத்துக்கு சமத்துவபுரம் தேவை இல்லை என்பது தெளிவாகிறது.

இந்த பகுதிக்கு என்ன தேவை என்பதை அறிந்து, பொதுமக்கள் ஒற்றுமையுடன் செயல் பட்டால் அதனை நிறைவேற்ற லாம். இங்குள்ள மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்று தெரிவித்தனர். நிச்சய மாக குடிநீர் வசதி விரைவில் ஏற்படுத்தி தரப்படும். மாவட்ட கலெக்டரிடம் குன்னூர் பகுதிக்கு என்னுடன் ஆய்வுக்கு வர கூறி உள்ளேன்.

ஆப்பிள் பீ குடிநீர் திட்டம்

வெலிங்டன் கண்டோன் மெண்ட் பகுதியில் உள்ள ஓடை புறம்போக்கு நிலத்தில் உள்ள தண்ணீரை எடுத்து ஆப்பிள்பீ குடிநீர் திட்டம் கொண்டு வர திட்டமிடப் பட்டது. இந்த திட்டத்தை செயல்படுத்தினால் குன்னூர் நகராட்சியின் 6 வார்டுகள் பயன்பெறும். ஆனால் கண் டோன்மெண்ட் அதிகாரிகள் இதனை தடுத்து வருகிறார்கள். இதனை சட்டப்பூர்வமாக அணுக வேண்டும். ஓடைப்புறம் போக்கு தண்ணீரை எடுக்க யாரும் தடை செய்யக்கூடாது என்று கலெக்டரிடம் கூறி உள்ளேன். ஆப்பிள்பீ குடிநீர் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

மேட்டுப்பாளையம் முதல் கக்கநல்லா வரை சாலை பழுதடைந்து இருந்தது. நீலகிரி மாவட்டம் வந்த துணை முதல்–அமைச்சரிடம் இது குறித்து கூறினேன். நான் சென்னையில் இருந்த போது அப்போதைய மத்திய நெடுஞ்சாலை துறை மந்திரி டி.ஆர்.பாலுவை அழைத்து, சாலையை சீரமைக்க நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யுமாறு துணை முதல்–அமைச்சர் கூறினார். இதன்படி ரூ.100 கோடி செலவில் உலகத் தரத்துக்கு ஏற்ப மேட்டுப்பா ளையம் முதல் கக்கநல்லா வரை சாலை அமைக்கப்பட் டது.

ரூ.400 கோடி

நீலகிரி மாவட்டத்தில் சாலை மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக்காக ரூ.400 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. வருகிற சட்டமன்ற தொகுதி தேர்தலுக்குள் நீலகிரி மாவட் டத்தில் உள்ள அனைத்து சாலைகளும் சீரமைக்கப் படும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசினார்.

விழாவில் பள்ளி மாணவி கள் அனுஷா, சுவேதா, சகானா, நிர்மா, ஷெபி, ஜெயச்சித்ரா மற்றும் குழுவினர் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் சவுந்தி ரபாண்டியன், கவுன்சிலர்கள் ஜோ.சார்லி, பழனிசாமி, ஜெகதளா பேரூராட்சி கவுன்சிலர் குமார், தி.மு.க. நிர்வாகிகள் அன்வர் கான், ராஜ்குமார், வெங்கடேஷ், சாதிக்பாட்ஷா, நந்தகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக செம்மொழி நகர் செயலாளர் மோகன் வரவேற்று பேசினார். முடிவில் நிர்வாக குழு உறுப்பினர் கணேஷ் நன்றி கூறினார்.

## ஷ்ஷ்ஷ்ஷ்...காரம் மண்டையை பிளக்குதே!



அசாம் மாநிலம் சிவசாகர் என்ற ஊரைச் சேர்ந்த இந்த பெண் கையில் பிடித்திருப்பது தான் உலகத்திலேயே அதிக காரம் உள்ள மிளகாய்கள் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.